දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.
අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister } 2784832, 2784807, 2785617
ලේකම් / செயலாளர் / Secretary } 2784812
කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50, Fax: 2784846
විද්‍යුත් තැපැල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
"ඉසුරුපාය"
බත්තරමුල්ල.
பாடசாலை செயற்பாட்டு மற்றும் தனியார் பாடசாலை கிளை
"Isurupaya"
Battaramulla.

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ..............................

මගේ අංකය / எமது இல. / My No. } ஈடி/01/12/01/04/24

දිනය / திகதி / Date } 2005.05.11

**சுற்றறிக்கை இல: 2005/17**

சகல மாகாண பொதுச் செயலாளர்கள்,
சகல மாகாண கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி/உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்
சகல அதிபர்கள்,

## பாடசாலைகளில் ஒழுக்க விழுமியங்களைப் பாதுகாத்தல்

எதிர்கால சிறந்த பிரஜைகளை உருவாக்கும் பாடசாலைகள் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அறிவு மற்றும் திறமையை வழங்குவது மாத்திரமன்றி சமூக ஒழுக்க விழுமியங்களுடன் வாழ்வதற்கு தேவைப்படும் சிந்தனைகள் மற்றும் ஒழுக்க விழுமியங்களை விருத்திசெய்ய தேவைப்படும் நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டியுள்ளது.

தற்போதைய சமூகத்தில் காணப்படும் சீரற்ற விளைவுகளாக இருப்பது சிறுவர் வன்முறை மற்றும் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துச் செல்வதாகும். தற்போதைய சிகலான சமூக முறைமையில் பாடசாலை செல்லக்கூடிய பாடசாலைகளிலும் பல்வேறுபட்ட நபர்களினால் கஷ்டங்களுக்கு உட்படுத்தப்படுவதாக தகவல்கள் தெரியவந்துள்ளன. இவ்வாறான சம்பவங்களினால் பிள்ளைகளின் எதிர்காலம் இருள்மயமாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இன்னல்களைச் செய்யும் நபர்கள் மற்றும் நிறுவனங்களில் பாடசாலை முறைமை, அதிலிருக்கும் பணியாளர்கள் மாணவர்களும் உள்ளடங்குவதாக தெரியவந்துள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கு பல வழிகளில் மேற்கொள்ளப்படும் இன்னல்கள் தொடர்பாக அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா பணியாளர்களுக்கும் எதிராக பெற்றோர்கள் சட்ட நடவடிக்கை எடுத்த பல சந்தர்ப்பங்கள் உள்ளன. மேலும் உலகில் சிறுவர் இன்னல்களை அதிகரித்ததைத் தொடர்ந்து சிறுவர் நன்னடத்தை பாதுகாப்பு உரிமைகளுக்காக விரிவான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் பாடசாலைகளைப் போன்று வெளியேயும் இவ்வாறான நிலைமைகளுக்கு இடமளிக்க முடியாதுள்ளதுடன் ஏதாவதொரு முறையில் இந்நிலைமை ஏற்பட்டால் தமது பாதுகாப்புக்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து பிள்ளைகளுக்கு விளக்கமூட்ட வேண்டும். பாடசாலைகளில் மாணவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவது மற்றும் இன்னல்களை தடுப்பது அத்தியவசியம் என்பதனால் இதன் மூலம் வழங்கப்படும் ஆலோசனைகளை பின்பற்ற வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

## 02. உடல்ரீதியிலான தண்டனைகள்

சகல சந்தர்ப்பங்களிலும் மாணவர்களுக்கு உடல் ரீதியான தண்டனைகளை வழங்குவதிலிருந்து தவிர்ந்துகொள்ள வேண்டும். அதிபர்கள் ஆசிரியர்களினால் மாணவர்களுக்கிடையே ஒழுக்க மாற்றங்களை ஏற்படுத்தும் சிந்தனையுடனும் நோக்குடனும் செயற்பட்டு உடல் ரீதியான தண்டனைகள் வழங்கக்கூடாது. இங்கு தண்டனை வழங்குவதன்றி விடயங்களை விளக்குதல், முன்மாதிரி மற்றும் சிறந்த அமைப்புகள் மூலம் உள்ளக ரீதியாக சுயஒழுக்கத்தை ஏற்படுத்துவதற்காக பயிற்சியளிப்பதன் மூலம் நபர் ஒருவர் தமது வாழ்வு பூராகவும் ஒழுக்க விழுமியங்கள் கொண்ட நபராக வாழ தேவைப்படும் பயிற்சிகளை பெறுவதென்பதனை மறந்துவிடக்கூடாது.

இலங்கையினால் கையொப்பமிட்டு முன்மொழியப்பட்ட (1989) ஐக்கியநாடுகள் சிறுவர் உரிமை தொடர்பான உடன்படிக்கை 28(2) வாசகத்தின் மூலம் பாடசாலைகளில் ஒழுக்க நிருவாகம் மாணவர்களின் மானிட கௌரவத்திற்கு அமைவான முறையில் மேற்கொள்வதை பொறுப்புடன் செயற்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

2.1 உடல் ரீதியான தண்டனைகள் வழங்கப்படுவது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் தெரியவந்திருப்பது பிள்ளைகளிடையே ஒழுக்கத்தை புகட்டும் போது வழங்கப்படும் தண்டனைகள் மூலம் எதிர்பார்த்த விளைவுகள் கிடைக்கவில்லை என்றும் கீழ்க் குறிப்பிடப்பட்ட பாதக விளைவுகள் ஏற்படக்கூடும்.

I. உடல் ரீதியான தண்டனைகளை வழங்குவதன் மூலம் திருட்டு, தாக்குதல்கள் போன்ற சமூகத்திற்கெதிரான பழக்கங்கள் மாணவர்களுக்கிடையே ஏற்படல்
II. சிறுவர் துஷ்பிரயோகத்திற்கான சந்தர்ப்பம் அதிகரிக்கின்றமை.
III. மாணவர்களுக்கிடையே ஆத்திரமடையும் பழக்கங்கள் அதிகரிக்கும்.
IV. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் / அதிபர்களுக்கிடையே தொடர்பு துண்டிக்கப்பட்டுவிடல்.
V. திருப்தியற்ற மானிட உணர்வுகள் பிள்ளைகளிடம் ஏற்படல்
VI. பிள்ளைகளினால் சிறந்த சிந்தனைகளை கட்டியெழுப்பும் போது பாதகமான முறையில் வற்புறுத்தல்கள் ஏற்படல்.

மேலும் உடல் ரீதியான தண்டனைகளை வழங்காது ஒழுக்கத்தைப் பாதுகாக்க முடியாத பட்சத்தில் அதன்மூலம் சித்தரித்துக் காட்டப்படுவது ஆசிரியரின் திறமையற்ற தன்மையே ஆகும்.

2.2 உடல் ரீதியான தண்டனைகளுக்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்பட்ட மாற்று நடவடிக்கைகளை பின்பற்ற முடியும்

I. பாடசாலையிலுள்ள மாணவர்கள் ஒழுக்க விழுமியத்திற்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபடவிருக்கும் சந்தர்ப்பங்களை குறைப்பதற்காக பாடசாலை செயற்பாட்டு மற்றும் பாட இணை நடவடிக்கைகளினை சிறந்த முறையில் ஒழுங்கு செய்தல்.
II. பாடசாலைகளின் ஒழுக்க விழுமியங்கள் தொடர்பாக சகலருக்கும் விளக்கமூட்டல் மற்றும் சிறந்த செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் தவறான செயற்பாடுகளுக்கு உதவாதிருத்தல் அல்லது அதனை அங்கீகரிக்காது இருத்தல்.
III. சிறந்த பழக்கங்களை ஏற்படுத்துவதற்கும் பாடசாலைகளில் ஒழுக்கத்தைப் பேணுவதற்கும் ஒழுக்க விழுமிய செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை

விளக்கமூட்டல், முன்மாதிரியாக மேற்கொள்ளல் மற்றும் மாணவர்களுக்கு சரியான வழிமுறைகளை காண்பித்தல்.

IV. மாணவர்கள் தவறிழைக்கும் வேளையில் அவரால் இழைக்கப்பட்ட தவறை விளக்கமூட்டல்.

V. மோசமான முறை ஒழுக்கத்திற்கெதிரான செயற்பாடுகளை மேற்கொண்ட வேளையிலும் உடல் மற்றும் உளரீதியான தண்டனைகளை வழங்குவதற்குப் பதிலாக எச்சரிக்கை செய்தல் மற்றும் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுக்கு அறிவித்தல்.

VI. தவறிழைத்த மாணவர் அனுபவிக்கும் வரப்பிரசாதங்களை வரையறுத்தல் அல்லது இடைநிறுத்தல். உ-ம்: வகுப்புத் தலைவர், மாணவர் தலைவர் போன்ற பதவிகளை இல்லாமற் செய்தல்.

VII. பாரிய ஒழுக்கத்திற்கெதிரான செயற்பாடுகளை மேற்கொண்ட வேளையில் பெற்றோருக்கு அறிவித்து இரண்டு வாரத்திற்கு அதிகரிக்காத வகுப்புக்குத் தடை விதித்தல்.

மேற்கூறப்பட்ட VI மற்றும் VII கீழ் செயற்படும் போது அதிபரினால் பாடசாலை ஒழுக்க சபையை அழைத்து அதன்மூலம் மேற்கொள்ளப்படும் பரிசோதனைக்குப் பின்னர் எடுக்கப்படும் தீர்மானத்தின் கீழ் மாத்திரம் அவ்வாறு செயற்பட வேண்டும்.

VIII. பாடசாலை ஒழுக்க சபையினால் மிக மோசமான ஒழுக்கத்திற்கெதிரான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தீர்மானித்த வேளையில் அச்செயற்பாட்டின் தன்மை மற்றும் தீவிரத் தன்மைக்கமைய வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது மாகாணக் கல்விப் பணிப்பாளரின் முன் அங்கீகாரத்துடன் 2 வாரத்திற்கு மேற்படாத காலத்திற்குள் வகுப்புத் தடை அல்லது பிள்ளை வேறொரு பாடசாலைக்கு கல்வி கற்ற ஆண்டிற்கே மாற்றம் செய்தல்.

மாணவர்கள் தொடர்பில் நடவடிக்கைகளை எடுக்கும் போது அது தொடர்பாக ஆவணரீதியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுடன் அவை கவனமாக கல்லூரியில் வைத்திருக்கவும் வேண்டும்.

மேலும் VII மற்றும் VIII இன் செயற்பாடுகளின் போது அதிபரினால் அது தொடர்பாக லொக் குறிப்பொன்றும் பேண வேண்டும். மேற்கூறப்பட்டவாறு மாணவர்களது சிறந்த செயற்பாடுகளை ஏற்படுத்தும் நோக்கில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் கல்லூரியின் பிரதான கூட்டம் அல்லது அறிவித்தற் பலகையில் பாடசாலையினுள் பகிரங்கப்படுத்த பொறுப்பாக இருக்க வேண்டும்.

2.3 பாடசாலையில் ஒழுக்கத்தை பேணும் நோக்கிலாக இருந்தாலும் மாணவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டால் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு சட்ட நடவடிக்கைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும்.

I. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் III அத்தியாயம் II வது வாசகம் மற்றும் xvi வது அத்தியாயம் 126வது பிரிவிற்கமைய அடிப்படை உரிமை மீறும் வழக்குத் தாக்கல் செய்யமுடியும்.

II. 1995 இல 22 கொண்ட குற்றவியல் சட்டத்தின் மூலம் (மறுசீரமைக்கப்பட்ட) சட்டத்தின் 3வது வாசகம் மற்றும் பிரதான சாசனத்தின் 308 (அ) பிரிவின் கீழ் பிள்ளைகள் மோசமான முறையில் தண்டனைக்கு உட்படுத்திய தவறின் கீழ் வழக்குத் தாக்கல் செய்ய முடியும்.

III. கல்வி அமைச்சின் பொறுப்பாளர்களினால் நடாத்தப்படும் ஒழுக்காற்று விசாரணைகளில் உடல் ரீதியான தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டால் தாபன விதிக் கோவையின் IIவது பிரிவின் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

3.0 சிறுவர் துஷ்பிரயோகம்

3.1 சிறு பராயத்திற்குப் பொருந்தாத பல்வேறுதரப்பட்ட முறையற்ற நடவடிக்கைகளுக்காக பிள்ளைகளை ஈடுபடுத்துவது சிறுவர் துஷ்பிரயோகமாக கருத முடியும். இலங்கையில் பல ஆண்டு காலம் முதல் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரித்துள்ளதுடன் தற்பொழுது பல்வேறுபட்ட முறையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் நாளுக்கு நாள் இடம்பெறும் நிலை ஏற்பட்டுள்ளது.

பாடசாலைகளுக்குள் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெறுவது கவலைக்குரிய விடயமாகும். பாடசாலையில் பிள்ளையின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டிய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் ஏனையோர் மூலம் பிள்ளைகளை முறையற்ற ரீதியில் நடாத்தப்படுவது கவலைக்குரிய நிலைமையாகும்.

3.2 சிறுவர் துஷ்பிரயோகத்தில் பாலியல் வற்புறுத்தல் மாணவர் / மாணவி உட்படுத்தப்படுவது பாரிய குற்றமாகும். இலங்கையின் 80வது தசாப்த நடுப்பகுதியில் சிறுவர் மற்றும் உடல் ரீதியிலான துஷ்பிரயோகம் குற்றமென்றும் 90ம் தசாப்த ஆரம்பப் பகுதியில் சிறுவர் பாலியல் உறவு பாரிய தண்டனைக்குரிய குற்றமென்றும் இனங்காணப்பட்டது.

இதனால் பாடசாலைகளில் மாணவர் / மாணவிகள் ஏதாவதொரு முறையில் துஷ்பிரயோகத்திற்கு இலக்காவதைத் தடுப்பது அதிபரினதும் ஆசிரியரினதும் பொறுப்பாகும்.

பாடசாலைகளில் மாணவர் / மாணவி பாலியல் அல்லது வேறு முறையிலான துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டால் அது உண்மையானது என ஊர்ஜிதப்படுத்தப்படும் பட்சத்தில் பாரிய தண்டனைகளுக்கு இலக்காக வேண்டியேற்படும் என்பதை விசேடமாக வலியுறுத்துகிறேன்.

3.3 பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் உட்பட பாடசாலைக்குள் மேற்கொள்ளப்படும் சகல நடவடிக்கைகளுக்கும் தடை ஏற்படக்கூடியவாறு கல்லூரியில் கல்வி மற்றும் கல்வி சாரா பணியாளர் சபை அங்கத்தவர்களினால் ஒழுக்கத்திற்கு எதிரான செயற்பாடுகளுக்கு மாணவர்களை தூண்ட ஒருபோதும் நடவடிக்கை எடுக்கக்கூடாது. மாணவர்கள் ஒழுக்கத்திற்கெதிரான செயற்பாடுகளுக்கு தூண்டுவது அவ்வாறானவர்களினால் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக குற்றச்சாட்டுக்கள் சமர்ப்பிக்கப்படும் வேளையில் அக்குற்றம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டால் மாணவரை தூண்டப்பட்டது தொடர்பாக உரிய குழு அல்லது நபருக்கு தீவிர தண்டனை வழங்க முடியும்.

இவ்வாறு சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது மேற்கூறப்பட்ட 2.3, I, II மற்றும் IIIல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயற்பாடுகளை மேற்கொள்ள முடியுமென மேலும் அறியத் தருகிறேன்.

4.0 சிறுவர் இன்னல்கள் தொடர்பிலான சகல புலனாய்வு மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளின் மேற்பார்வை செய்தல் உட்பட விசேட அதிகாரங்கள் 1998 இல 50 கொண்ட பாராளுமன்ற சட்டத்தின் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நிறுவப்பட்டுள்ளது. அவ்வதிகார சபையினால் தமது

அதிகாரங்களை அமுல்படுத்தும் போது மாகாணக் கல்விப் பணிப்பாளர் அல்லது வலயக்கல்விப் பணிப்பாளர் அல்லது பாடசாலை பொறுப்பாளரிடம் ஏதாவதொரு உதவி கேட்கப்படும் போது அதற்காகத் தேவைப்படும் உதவியை அவ்வதிகார சபைக்கு வழங்குமாறு இத்தால் ஆலோசனை தெரிவிக்கிறேன்.

மேலும் மனிதாபிமானமற்ற முறையில் தண்டனைகளை வழங்காது பாடசாலைகளில் ஒழுக்க விழுமியங்களை பேணிவருவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதுடன் பாடசாலைகளில் சிறுவர் துஷ்பிரயோக செயற்பாடுகள் இடம்பெறாத சூழலை ஏற்படுத்தவும் பொறுப்பாக இருக்க வேண்டுமென மேலும் வலியுறுத்துகிறேன். இந்நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் அர்ப்பணிப்பு செய்யவேண்டுமென எதிர்பார்க்கிறேன்.

பாடசாலை மாணவர்களுக்கு உடல் ரீதியான தண்டனைகள் வழங்குவது தொடர்பாக இல. 1961 / 26 மற்றும் 1961.07.21 திகதி கொண்ட சுற்றறிக்கை மற்றும் பாடசாலைகளின் ஒழுக்கத்தை பாதுகாப்பது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள இல. 2001/11 மற்றும் 2001.03.30ம் திகதிய சுற்றறிக்கையை இத்தால் இரத்துச் செய்வதாக அறிவிக்கிறேன்.

டாக்டர் தாரா டி மெல்
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதிகள் :

1. கல்வி அமைச்சின் சகல கிளைப் பொறுப்பாளர்களுக்கும்.
2. தேசிய கல்வி நிறுவக பணிப்பாளர் நாயகம்
3. கல்வி வெளியீட்டின் ஆணையாளர்.
4. பரீட்சை ஆணையாளர் நாயகம்.
5. தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர்.